தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.168/ந/2026, நாள் 24.08.2026**

S. கௌரி பிரசாந்த்,
நரசிங்கபுரம், சேலம் மாவட்டம், – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நரசிங்கபுரம் நகராட்சி, சேலம் மாவட்டம். – எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்கா, தாண்டவராயபுரம் அஞ்சல், நரசிங்கபுரம், தெற்கு காடு, பெரிய பண்ணை தோட்டம் என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. கௌரி பிரசாந்த் என்பவரது 13.07.2026 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2026 அன்று பெறப்பட்டு 168/ந/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தாண்டவராயபுரம் அஞ்சல், நரசிங்கபுரம், தெற்கு காடு, பெரிய பண்ணை தோட்டம் என்கிற முகவரியில் வசிக்கும் மனுதாரரான திரு. S. கௌரி பிரசாந்த் என்பவர் தனது 07.09.2023 நாளிட்ட புகார் மனுவில் நரசிங்கபுரம் நகராட்சி பகுதியில் புல எண்.379/1, 379/3A-ல் அவர்களது அனுமதியின்றி நரசிங்கபுரம் நகராட்சியினரின் அறிவுறுத்தலின் பேரில் குடிநீர் ராட்சத பைப்லைன் அமைக்கப்பட்டுள்ளது என்றும் விதிமீறி தார்சாலையும் போடப்பட்டுள்ளது என்றும் இதுகுறித்து நகராட்சி ஆணையாளரை அணுகி கேட்கும்போது எங்களது இடத்தில் பைப்லைன் பதிக்க எவ்வித அனுமதியும் வழங்கவில்லை என்றும் எங்களது இடத்தில் தார்சாலை அமைக்கப்படவில்லை என்றும் அவ்வாறு அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை எனவும் தெரிவித்து எங்களது இடம் எங்கு அமைந்திருக்கிறது என்று தெரியாது எனவும் தெரிவித்தார் என புகார் தெரிவித்து மனுதாரரது இடத்தில் அமைந்துள்ள பைப்லைனையும், தார்சாலையும் அகற்றிட நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றத்தை நாடியிருந்தார்.

2. மனுதாரரின் புகார் குறித்து இம்முறைமன்ற நடுவம் மனுதாரர், நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், 17. நரசிங்கபுரம் கிராமம் ஆகியோரிடம் உரிய விசாரணை

மேற்கொண்டு மனுதாரரின் புகாருக்கு கீழ்க்கண்டவாறு ஆணை எண். 263/ந/2023, நாள் 31.10.2023–னை இம்முறைமன்ற நடுவம் வெளியிடப்பட்டது. அதில்–

"புல எண்.379/1 மற்றும் 379/3 A–ல் அமைந்துள்ள நிலத்தின் வகைப்பாட்டினை குறித்து வருவாய் ஆவணங்களான 'அ' பதிவேடு (A Register), சிட்டா மற்றும் அடங்கல் ஆகிய பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டதில் நிலத்தின் உரிமையாளரின் பெயர் சாந்தி என உள்ளது. மேற்காணும் மூல ஆவணங்களின் மூலம் சாந்தி என்பவர் (மனுதாரரின் தாயார்) சம்மந்தப்பட்ட இடத்தின் உரிமையாளர் என்பது எவ்வித சந்தேகமுமின்றி தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது.

*** *** ***

மனுதாரர் தனது இடத்தில் குடிநீர் குழாய் மற்றும் தார்சாலை அமைக்கப்படுவது குறித்து நகராட்சியில் புகார் தெரிவித்த உடனேயே உரிய வருவாய் ஆவணங்களை நகராட்சியினர் ஆய்வு செய்திருந்தால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் குழாய் அமைக்கப்படுவதை தவிர்த்திருக்கலாம். மேலும், நகராட்சியினர் எவ்வித மூல ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமல், தனிநபர் இடத்தில் விதிமீறி தார் சாலை அமைத்துள்ளதன் மூலம் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு, உள்நோக்கத்துடனும், தங்களது பணியில் கடமை தவறியுள்ளது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது. இவ்வாறு உரிய விதிகளை பின்பற்றாமல், முறைக்கேடாக நடந்துகொண்ட சம்பந்தப்பட்ட நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர், பொறியாளர், நகரமைப்பு அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரரின் தாயார் பெயரிலுள்ள நகர்புல எண். 379/1 மற்றும் 379/3A-ல் உள்ள இடத்தினை திரும்பவும் அவர்களுக்கு ஒப்படைக்கும் வகையில் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு, எடுத்த நடவடிக்கையின் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

Severe disciplinary action should be launched against the Municipal Commissioner, Municipal Engineer and other field officials concerned and involved in this unlawful, arbitrary and brutal act of trespassing on the patta lands for formation of road by the Municipality. The petitioner's mother had moved the authorities consistently and failed to receive fair and appropriate disposal of her legitimate prayer of not laying road or pipeline under the earthen surface of the land that belongs to her with the sovereign right. This sort of barbarous action on a private property by a local body cannot be brooked and let gone scot free without accountability. This Forum expresses its outright shock and condemnation over this excess, illegal, unjust and violative of one's constitutional rights. Hence, the DMA is directed to obtain the property owner's consent by usual procedure as laid down by payment of compensation as per rules and regulations or remove the road access. If the land owner moves the court the Municipality will have to face embarrassment of strictures, compensation as fixed and needless adverse remarks in the light of the facts of this case." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆணையின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது எனவும், தக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு **23.01.2024** மற்றும் **01.04.2024** நாளிட்ட கடிதங்களில் கோரியிருந்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்ட விதிகளில், விதி **12–ல்** கீழ் கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டு, மேற்படி விதியின் கீழ் இம்முறைமன்ற நடுவத்தின் ஆணையை செயல்படுத்தியிருந்தால் அது குறித்த அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பித்திடவும், அவ்வாறு செயல்படுத்தாமல் இருப்பின் தொடர்புடைய அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் கடிதம் ந.க.எண்.**099/ந/2024**, நாள் **02.09.2024–ல்** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

> " 12. Implementation of the Order of the Ombudsman.- All the parties to the complaint and other persons to whom a direction was issued by Ombudsman in his/her order, as the case may be, are liable to implement the order of the Ombudsman. In case of non-implementation, severe action shall be taken by the competent authorities against those who fail to implement the orders of the Ombudsman, on a reference made by the Ombudsman.".

மேற்படி கடித நகல் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கும், மனுதாரரான திரு. S. கௌரி பிரசாந்த் என்பவருக்கும் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் இம்முறை மன்ற நடுவத்தை முதல் பிரதிவாதியாக கொண்டு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.21650/2026 (W.P. No. 21650/2026)-ல் **10.06.2026** நாளிட்ட தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது:

> "3. xxx xxx
>
> 4. xxx xxx
>
> 5. xxx xxx
>
> 6. Considering the facts and circumstances of the case and in view of the limited request sought for by the petitioner, this court directs the first respondent to consider and pass orders on the petitioner's representation dated 27.03.2026 and also to implement the order dated 31.10.2023 within a period of six weeks from the date of receipt of a copy of this order, if there is no legal impediment.
>
> 7. With the above directions, the writ petition is disposed of. No costs.".

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மேற்படி தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரரின் **27.03.2026** நாளிட்ட கடிதம் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்டது. அந்த கடிதத்தில் பத்தி **6** மற்றும் **7–ல்** கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இதில் மனுதாரர் 'நீங்கள்' என்று குறிப்பிட்டிருப்பது நரசிங்கபுரம் நகராட்சி ஆணையரைக் குறிக்கும்.)

> "மேற்படி உத்தரவின் (தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **30.10.2023** நாளிட்ட ஆணை எண். **263/ந/2023**) அடிப்படையில் நீங்கள் தற்போது வரை நிலத்தினை எனக்கு ஒப்படைக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் உத்தரவை மதிக்காமல் அவமதிப்பு செய்துள்ளீர். மேற்படி உத்தரவின் அடிப்படையில் நீங்கள் எந்தவொரு நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருந்த காரணத்தினால் நேற்று **(26.03.2026)** மாலை **4.00** மணியளவில் **14**வது வார்டு கவுன்சிலர் சுரேஷ் மற்றும் அவருடன் **10** நபர்கள் எனது நிலத்திற்கு ஜேசிபி வண்டி எண். TN 77 S 0252–னை எடுத்து வந்து நீங்கள் உத்தரவு பிறப்பித்ததாக தெரிவித்து எனது நிலத்தில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக சமப்படுத்த முயற்சி செய்தார்கள். அதனை தடுக்க முயன்ற என்னையும், எனது குடும்ப உறுப்பினர்களையும் கெட்ட

வார்த்தைகளால் திட்டி தாக்கினார்கள். அதன்பின் நான் உடனடியாக ஆத்தூர் நகர காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து காவல் உதவி ஆய்வாளர் சிவசக்திவேல் என்பவர் சம்பவ இடத்திற்கு வந்தார். காவல் உதவி ஆய்வாளர் சட்டவிரோதமாக கூடியிருந்த சுரேஷ் மற்றும் 10 அடியாட்களிடம் நிலத்தினை சமப்படுத்துவதற்கு உங்களுக்கு எந்தவிதமான உரிமையுமில்லை என்றும், உத்தரவு ஏதேனும் இருந்தால் காண்பிக்குமாறு கேட்டார். மேற்படி நபர்கள் ஆணையாளராக நீங்கள் வாய்மொழியாக சொன்ன உத்தரவின் அடிப்படையில் நிலத்தினை சமப்படுத்துவதாக தெரிவித்தார்கள். அதன்பின் காவல் உதவி ஆய்வாளர் மேற்படி சட்டவிரோதமாக செயல்பட்ட நபர்களை எச்சரித்து அனுப்பிவிட்டார். எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் சட்டத்திற்கு விரோதமாக எனது நிலத்தில் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்து பாதை அமைக்க 14வது வார்டு கவுன்சிலர் மற்றும் அவருடன் இருக்கும் ஆட்கள் செயல்பட்டு வருகிறார்கள். ஏற்கனவே பலமுறை மேற்படி சட்டவிரோத செயல்களை குறித்து தங்களிடம் நேரடியாக தெரிவித்தபோதும், நீங்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே இந்த கடிதம் கிடைத்தவுடன் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கடந்த 31.10.2023ம் தேதி ஆணை எண். 263/ந/2023ன் அடிப்படையில் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து சர்வே எண்கள் 379/1, 3எ–ல் இருக்கும் நிலங்களை மீண்டும் எனது வசம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.".

மனுதாரரான திரு. S. கௌரி பிராசாந்த் சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.21650/2026 (W.P. No. 21650/2026)-ன் 10.06.2026 நாளிட்ட தீர்ப்பினை இணையத்தில் பதிவிறக்கம் செய்து அதன் நகலினையும், மனுதாரர் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 27.03.2026 நாளிட்ட மனுவின் நகலினையும் இணைத்து இம்முறைமன்றத்திற்கு 13.07.2026 நாளிட்ட மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"I, S. Gowriprasanth, submit this Legal Notice / Compliance Representation seeking strict, effective and time-bound compliance with the order dated 10.06.2026 passed by the Hon'ble High Court of Madras in W.P.No. 21650 of 2026, and effective implementation of the Tamil Nadu Local Bodies Ombudsman Order No. 263/Na/2023, dated 31.10.2023.

The Hon'ble High Court has directed the competent authority to consider and pass appropriate orders on my representation dated 27.03.2026 and also to implement the order dated 31.10.2023 within a period of six weeks from the date of receipt of a copy of the High Court order, if there is no legal impediment.

My representation dated 27.03.2026 was submitted to the Second Respondent / Commissioner, Narasingapuram Municipality, seeking implementation of the Ombudsman order and necessary action to prevent further interference, disturbance, and unauthorized activity in respect of my patta land.

The dispute concerns my patta land at Narasingapauram, Attur Taluk, Salem District, particularly relating to the disputed road access, pipeline, and repeated interference with my peaceful possession and enjoyment of the property. The Ombudsman Order No. 263/Na/2023 dated 31.10.2023 has already dealt with the issues concerning unauthorized road access, pipeline-related aspects, and the role of concerned municipal authorities.

I respectfully state that my primary objective is not monetary compensation. My main grievance is the effective recovery, protection, and peaceful enjoyment of my land and lawful rights, through proper implementation of the Ombudsman order and the directions of the Hon'ble High Court.

Even before submitting my representation dated 27.03.2026, I had submitted an earlier representation dated 21.10.2024 before the First Respondent regarding non-implementation /rectification / further action pursuant to the Ombudsman order. However, no effective field-level implementation followed. Therefore, as the earlier representation did not result in effective field-level implementation and the disturbance, harassment, threats, and interference in respect of my property continued, I was constrained to submit the subsequent representation dated 27.03.2026 before the Second Respondent and thereafter pursue the matter before the Hon'ble High Court.

Despite the Ombudsman Order No. 263/Na/2023 dated 31.10.2023, my earlier representation dated 21.10.2024, and my subsequent representation dated 27.03.2026, the issue remains unresolved, and I have continued to face recurring hardship, disturbance, threats, intimidation, and interference in relation to my own property for nearly five years.

I further state that even after my representation dated 27.03.2026, the same JCB again entered and disturbed my property on two separate occasions. The persons involved claimed that the Municipality had granted permission and that they could proceed with the work irrespective of my objections. During such incidents, threats and intimidation were made, including abusive caste-name reference and threatening conduct, evidently to pressurize me and prevent me from asserting my lawful rights over my property.

I also state that the Municipal Engineering Section made a spot visit to the site and recorded a statement in a manner adverse to my rights. When the subsequent JCB interference, threats, and related incidents were brought to the notice of the Municipal Commissioner, no effective response, preventive action, or meaningful administrative intervention was taken. Though assurances of action were given, no practical improvement or preventive measure has been implemented.

The Second Respondent / Narasingapuram Municipality is the field-level authority responsible for municipal records, field verification, unauthorized road access, layout-related activity, and prevention of misuse of the Municipality's name. Therefore, the Second Respondent is required to act upon my representation dated 27.03.2026 in accordance with the Ombudsman order and the High Court order.

The Fourth Respondent / TWAD Board is also directly relevant because the pipeline issue forms an important part of the dispute and implementation process. Since the Fourth Respondent is also a party to W.P. No.21650 of 2026, specific directions must also be issued to the Fourth Respondent, along with the Second and Third Respondents, so that there is no implementation gap, delay, or incomplete compliance.

The Third Respondent, being the supervisory authority connected with Municipal Administration and Water Supply, is required to ensure that the Second and Fourth Respondents act in a coordinated, lawful, and time-bound manner without delay or misrepresentation of facts.

In the circumstances, I hereby call upon the First Respondent to take immediate cognizance of the above facts and issue specific, clear, binding, coordinated, and time-bound implementation directions to the Second, Third, and Fourth Respondents, particularly the Second Respondent / Narasingapuram Municipality and the Fourth Respondent / TWAD Board, for strict compliance with the Hon'ble High Court order dated 10.06.2026 and Ombudsman Order No. 263/Na/2023 dated 31.10.2023.

I respectfully request the First Respondent to direct the Second to Fourth Respondents to:

1. Strictly comply with the order dated 10.06.2026 passed by the Hon'ble High Court in W.P. No. 21650 of 2026.

2. Consider and pass appropriate additional orders on my representation dated 27.03.2026, while also taking note of my earlier representation dated 21.10.2024 submitted before the First Respondent regarding non-implementation / rectification / further action, and after properly examining the records, allegations, subsequent JCB interference, threats, continued hardship, administrative inaction, and the specific role of the Fourth Respondent / TWAD Board in relation to the pipeline-related implementation issue.

3. Fully implement the Tamil Nadu Local Bodies Ombudsman Order No. 263/Na/2023 dated 31.10.2023 in letter and spirit.

4. Direct the Second Respondent / Narasingapuram Municipality to conduct a proper field inspection, verify all relevant municipal records, revenue records, and other connected documents and take effective action regarding the disputed road access, if it is found to be without lawful authority, without landowner consent, unsupported by the relevant records, or inconsistent with the findings and directions contained in the Ombudsman Order No. 263/Na/2023 dated 31.10.2023.

5. Direct the Fourth Respondent / TWAD Board to verify all pipeline related records and take appropriate action regarding removal, relocation or other lawful steps concerning the pipeline, if it is found to be without lawful authority without landowner consent, or contrary to the Ombudsman order and connected records.

6. Ensure that the Second Respondent and Fourth Respondent act jointly and in coordination, so that the road access and pipeline issues are not handled separately in a manner that defeats effective implementation of the Ombudsman order and the High Court directions.

7. Prevent any further unauthorized entry, layout, road-related work, pipeline-related work, JCB movement, or interference in my property by using the name of the Municipality without lawful authority.

8. Take note of the subsequent incidents after 27.03.2026, including the JCB interference, threats, continued hardship and administrative inaction, and fix appropriate administrative responsibility wherever necessary.

9. Pass a detailed speaking order / reasoned order, clearly recording the records verified, field inspection findings, action taken, and the manner in which the Ombudsman order and High Court order have been implemented.

10. Complete the entire implementation within the six-week period stipulated by the Hon'ble High Court, without further delay.

I respectfully submit that unless immediate and effective directions are issued to the Second to Fourth Respondents, there is a serious risk of further misuse of the Municipality's name, continued disturbance, and non-implementation of the orders already passed by the Ombudsman and the Hon'ble High Court.

Therefore, I request the First Respondent to strictly monitor the activities of the concerned Municipality and TWAD Board, prevent further unauthorized or illegal acts, ensure strict compliance with the Ombudsman order, and direct the Second to Fourth Respondents to implement the High Court's directions within the prescribed six weeks period in both letter and spirit.

If no effective action is taken within the time fixed by the Hon'ble High Court, I will be constrained to initiate appropriate further legal proceedings before the competent forum, including proceedings for enforcement, clarification, contempt, or any other remedy available in law, at the risk and responsibility of the concerned authorities.

This Legal Notice / Compliance Representation is issued without prejudice to all my rights, remedies, claims, and contentions available in law.".

2. மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.21650/2026 (W.P.No.21650/2026)-ன் **10.06.2026** நாளிட்ட தீர்ப்பில், மனுதாரர் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கு **27.03.2026** நாளிட்டு அளித்த மனுவினை பரிசீலித்து ஆணை வெளியிடவும், இம்முறைமன்ற நடுவத்தின் ஆணை எண். **263**/ந/**2023**, நாள் **31.10.2023**-னை செயல்படுத்த முதலாம் எதிர்மனுதாரரான இம்முறைமன்ற நடுவத்திற்கு **6** வார கால அவகாசம் அளித்து ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி மனுதாரரின் **27.03.2026** நாளிட்ட மனு மீது விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, **28.07.2026** அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் **16.07.2026** நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் நகல் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கும் அனுப்பப்பட்டது.

3. இந்நிலையில் மனுதாரர் **20.07.2026** நாளிட்ட மனுவில் கீழ்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார். அதில் –

"மேற்கண்ட விஷயத்தில், தங்களால் அனுப்பப்பட்டுள்ள விசாரணை அறிவிப்பின் அடிப்படையில், **28.07.2026** அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு முன்பாக, இக்கூடுதல் எழுத்து மனுவை பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் W.P.No. 21650 of 2026-ல் **10.06.2026** அன்று வழங்கிய உத்தரவில், எனது **27.03.2026** தேதிய மனுவை பரிசீலித்து உரிய உத்தரவு பிறப்பிக்கவும், மேலும் **31.10.2023** தேதிய முறைமன்ற ஆணையை ஆறு வார காலத்திற்குள் நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனது **27.03.2026** மனு, தனித்த புதிய கோரிக்கையாக அல்லாமல், ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட முறைமன்ற ஆணை எண். **263**/ந/**2023**, நாள் **31.10.2023**–ஐ நடைமுறைப்படுத்துவதற்காகவே சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, **27.03.2026** மனுவை மட்டும் தனியே பரிசீலித்து, அதனுடன் நேரடியாக தொடர்புடைய முறைமன்ற ஆணையின் செயலாக்கம், சர்ச்சைக்குரிய சாலை / வழிப்பாதை பயன்பாடு, குடிநீர் குழாய், நகராட்சி பதிவுகள், வருவாய் பதிவுகள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை பதிவுகளை பரிசீலிக்காமல் முடிவெடுப்பது, உயர்நீதிமன்ற உத்தரவின் முழு நோக்கத்தையும் நிறைவேற்றாது.

முறைமன்ற ஆணை எண். **263**/ந/**2023**-ல், பட்டா நிலம், சர்ச்சைக்குரிய சாலை / வழிப்பாதை பயன்பாடு, குடிநீர் குழாய், நகராட்சி அதிகாரிகளின் செயற்பாடு, நில உரிமையாளரின் ஒப்புதல், சட்டப்படி இழப்பீடு அல்லது உரிய மாற்று நடவடிக்கை போன்ற முக்கிய அம்சங்கள் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அந்த ஆணை இதுவரை முழுமையாகவும் நடைமுறை ரீதியாக பயனளிக்கும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படாததே தற்போதைய மனுவின் மையப் பிரச்சனையாகும்.

இதுகுறித்து, நான் **21.10.2024** அன்று தங்களிடம் விரிவான மனு அளித்து, முறைமன்ற ஆணை நடைமுறைப்படுத்தப்படாத நிலை, திருத்தம் / மேல் நடவடிக்கை தேவைகள், சம்பந்தப்பட்ட பதிவுகள் மற்றும் தொடர்ந்த பிரச்சனைகள் குறித்து விளக்கியிருந்தேன். பின்னரும் நிலைமை

சரியாகாமல் தொடர்ந்ததுடன், நகராட்சியின் பெயரை முன்வைத்து எனது நிலத்தில் மீண்டும் குறுக்கீடு, தொந்தரவு மற்றும் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட முறைமன்ற ஆணையை நடைமுறைப்படுத்தவும், எனது உரிமை மற்றும் அமைதியான பயன்பாட்டை பாதுகாக்கவும், 27.03.2026 அன்று நரசிங்கபுரம் நகராட்சிக்கு மீண்டும் மனு அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே, தற்போதய விசாரணை 27.03.2026 மனுவின் பரிசீலனைக்கு மட்டும் வரையறுக்கப்படாமல், அந்த மனுவினை உண்மையான நோக்கமான முறைமன்ற ஆணை எண். 263/ந/2023-ன் முழுமையான நடைமுறைப்படுத்தல் என்பதையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பதிவுகள் ஏன் அவசியம்

இவ்விவகாரத்தில், இரண்டாவது எதிர் மனுதாரரான நரசிங்கபுரம் நகராட்சி, தற்போதைய நகராட்சி ஆணையர், சம்மந்தப்பட்ட பொறியியல் பிரிவு அதிகாரி / பணிப்பார்வையாளர் மற்றும் சம்மந்தப்பட்ட கோப்புகளை அறிந்த அதிகாரிகள் ஆகியோரின் விளக்கங்களும், அவர்களிடம் உள்ள அசல் பதிவுகளும் மிக முக்கியமானவை.

குறிப்பாக, சர்ச்சைக்குரிய சாலை / வழிப்பாதை பயன்பாடு, நகராட்சி பதிவுகள், பொறியியல் பிரிவு நடவடிக்கைகள், நகராட்சியின் பெயரில் கூறப்பட்ட அனுமதி மற்றும் எனது நிலத்தில் ஏற்பட்ட அனுமதியற்ற குறுக்கீடுகள் ஆகியவை, முறைமன்ற ஆணையின் நடைமுறைப்படுத்தலுடன் நேரடியாக தொடர்புடையவை.

மேலும், நான்காவது எதிர்மனுதாரரான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board) தொடர்புடைய குடிநீர் குழாய் பதிவுகள், அனுமதி, குழாய் பதியப்பட்ட பாதை குறித்த வரைபடம், வேலை ஆணை, நகராட்சி மற்றும் வாரியம் இடையிலான தொடர்பு பதிவுகள் ஆகியவை, முறைமன்ற ஆணையின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முக்கிய அம்சங்களாகும்.

ஆகவே, தங்களது அதிகார வரம்பிற்குள் பொருத்தமான முறையில், குடிநீர் குழாய் தொடர்பான தேவையான பதிவுகள், விளக்கங்கள் மற்றும் நடவடிக்கை அறிக்கைகளை நான்காவது எதிர் மனுதாரரிடமிருந்து நேரடியாகவும், மூன்றாவது எதிர் மனுதாரரான மேற்பார்வை நிர்வாகத் துறை வாயிலாகவும் பெற்று பரிசீலிப்பது அவசியமாகும்.

மூன்றாவது எதிர் மனுதாரரான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்பார்வைத் துறையாக இருப்பதால், முறைமன்ற ஆணை எண். 263/ந/2023, இதுவரை ஏன் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, மேலும் நடைமுறைப்படுத்த தேவையான நிர்வாக நடவடிக்கைகள் என்ன என்பதற்கான தெளிவான அறிக்கையும் அவசியமாகிறது.

மேலும், முறைமன்ற ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னரும், 27.03.2026 மனுவிற்குப் பின்னரும், எனது மனுவில் குறிப்பிட்டபடி JCB வாகன எண். TN 77 S 0252 தொடர்பான குறுக்கீடு, நகராட்சி அனுமதி உள்ளதாக கூறப்பட்ட நிலை, அச்சுறுத்தல், தொடர்ந்து ஏற்பட்ட தொந்தரவு மற்றும் நிர்வாக செயலற்ற நிலை ஆகியவை, ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட முறைமன்ற ஆணை நடைமுறைப்படுத்தப்படாததன் விளைவுகளாகவே பரிசீலிக்கப்பட வேண்டியவை.

எனவே, தற்போதைய விசாரணையில் வாய்மொழி விளக்கங்களை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், சம்மந்தப்பட்ட அதிகாரப்பூர்வ அசல் பதிவுகள், கோப்புகள், கள ஆய்வு அறிக்கைகள், துறை அறிக்கைகள் மற்றும் நடவடிக்கை அறிக்கைகள் அடிப்படையில் விசாரணை நடைபெறுவது மிக அவசியமாகும்.

எனவே, பணிவுடன் நான் கோருவது:

1. தங்களது முறைமன்ற மனு எண். 168/ந/2026, தொடர்பான 28.07.2026 விசாரணையில், இக்கூடுதல் எழுத்து மனுவை பதிவில் ஏற்று, விசாரணையின் ஒரு பகுதியாக பரிசீலிக்கவேண்டுகிறேன்.

2. 27.03.2026 மனுவை தனித்த மனுவாக மட்டும் கருதாமல், அது முறைமன்ற ஆணை எண். 263/ந/2023, நாள் 31.10.2023-ஐ நடைமுறைப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட மனு என்பதை பதிவு செய்து, அதன்படி விசாரணை நடத்த வேண்டுகிறேன்.

3. இரண்டாவது எதிர்மனுதாரரான நரசிங்கபுரம் நகராட்சி, தற்போதைய நகராட்சி ஆணையர், சம்பந்தப்பட்ட பொறியியல் பிரிவு அதிகாரி / பணிப்பார்வையாளர் மற்றும் சம்மந்தப்பட்ட கோப்புகளை அறிந்த அதிகாரிகள் ஆகியோரை தொடர்புடைய அசல் பதிவுகளுடன் விசாரணைக்கு ஆஜராகுமாறு உத்திரவிட வேண்டுகிறேன்.

4. சாலை அமைக்கப்பட்டதாகவோ அல்லது வழிப்பாதை பயன்பாடு இருப்பதாகவோ கூறப்படும் விவகாரத்தில், அதனை ஆதரிக்கும் நகராட்சி தீர்மானம், அனுமதி, வேலை ஆணை, மதிப்பீடு, அளவுப் புத்தகம், நிறைவு அறிக்கை, வரைபடம், தொடர்பு கடிதங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நகராட்சி மற்றும் வருவாய் பதிவுகள் ஆகியவற்றை சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டுகிறேன்.

5. குடிநீர் குழாய் தொடர்பாக, நான்காவது எதிர் மனுதாரரிடமிருந்து குழாய் பதிக்கப்பட்ட பாதை குறித்த வரைபடம், வேலை ஆணை, அனுமதி, தடையின்மைச் சான்று, நகராட்சி மற்றும் நான்காவது எதிர்மனுதாரர் இடையிலான தொடர்பு கடிதங்கள், நில உரிமையாளர் ஒப்புதல் / இழப்பீடு தொடர்பான பதிவுகள் இருந்தால் அவை, மற்றும் சம்மந்தப்பட்ட பிற அசல் பதிவுகளை பெற்று விசாரணைக்கு உட்படுத்த வேண்டுகிறேன்.

6. மூன்றாவது எதிர்மனுதாரரான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை வாயிலாக, முறைமன்ற ஆணை எண். 263/ந/2023, இதுவரை ஏன் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், நடைமுறைப்படுத்த தேவையான நிர்வாக நடவடிக்கைகள் என்ன என்பதற்கான அறிக்கையை பெற வேண்டுகிறேன்.

7. முறைமன்ற ஆணை எண். 263/ந/2023 தொடர்பாக நரசிங்கபுரம் நகராட்சி அல்லது அதன் அதிகாரிகள் முன்பு தங்களிடம் ஏதேனும் விளக்கம், எதிர் விளக்கம், கடிதம் அல்லது அறிக்கை அனுப்பியிருந்தால், அவற்றையும் தற்போதைய விசாரணை பதிவில் கொண்டு வந்து பரிசீலிக்க வேண்டுகிறேன்.

8. 27.03.2026 மனுவிற்கு முன்பும், பின்னர் ஏற்பட்டதாக நான் குறிப்பிடப்பட்டுள்ள JCB வாகன எண் . TN 77 S 0252 தொடர்பான குறுக்கீடு, நகராட்சி அனுமதி உள்ளதாக கூறப்பட்ட நிலை, அச்சுறுத்தல், தொடர்ந்து ஏற்பட்ட தொந்தரவு மற்றும் நிர்வாக செயலற்ற நிலை ஆகியவற்றை, முறைமன்ற ஆணை நடைமுறைப்படுத்தப்படாததன் விளைவுகளாக பரிசீலிக்க வேண்டுகிறேன்.

9. சம்மந்தப்பட்டஅதிகாரப்பூர்வ பதிவுகள் பெறப்படாமல், வெறும் வாய்மொழி விளக்கங்கள் முழுமையற்ற அறிக்கைகள் அல்லது ஆதாரமற்ற விளக்கங்களின் அடிப்படையில் விசாரணை முடிக்கப்படாமல் இருக்க வேண்டுகிறேன்.

10. மாண்புமிகு உயர்நீதிமன்றம் நிர்ணயித்துள்ள ஆறு வார காலவரம்பை கருத்தில் கொண்டு, முறைமன்ற ஆணை எண். **263/ந/2023**, நாள் **31.10.2023**-ஐ, முழுமையாக நடைமுறைப்படுத்த தேவையான தெளிவான, ஒருங்கிணைந்த மற்றும் காலவரையறையுடனான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

11. சம்மந்தப்பட்ட பதிவுகள், கள ஆய்வு அறிக்கை, துறை விளக்கங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்அனைத்தையும் பரிசீலித்து, முறைமன்ற ஆணை முழுமையான நடைமுறைப்படுத்தப்படுவதற்கான தெளிவான இறுதி உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

12. மேற்கண்ட கோரிக்கைகள் மீது உடனடியாக உத்தரவு பிறப்பிக்க இயலாத நிலை இருப்பின், இம்மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள், ஆட்சேபனைகள் மற்றும் ஆதாரப்பூர்வமானசமர்ப்பிப்புகளை எனது எழுத்து மூலமான இறுதி விளக்கமாக விசாரணை பதிவில் சேர்த்து, இறுதி உத்தரவு பிறப்பிக்கும்போது அவற்றை கருத்தில் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதி சமர்ப்பிப்பு

இந்தக் கூடுதல் எழுத்து மனுவை நான் முன்வைப்பதன் நோக்கம், சம்மந்தப்பட் ஆவணங்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகத் துறைகள் தேவையான அளவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் மட்டுமே, ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட முறைமன்ற ஆணையை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், தற்போது தொடர்ந்து நிலவி வரும் பிரச்சினைகள் தொடர்பாக பயனுள்ள மற்றும் சட்டப்படி பொருத்தமான நிவாரணம் பெறவும் முடியும் என்பதே ஆகும்.

எனவே, தங்களது விசாரணை அறிவிப்பின் அடிப்படையில் நடைபெறவுள்ள விசாரணையில், இம்மனுவை கூடுதல் எழுத்து மனுவாக ஏற்று, மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவை ஆறு வார காலவரம்பிற்குள் நடைமுறைப்படுத்தவும், முறைமன்ற ஆணை எண். **263/ந/2023**, நாள் **31.10.2023-ஐ** முழுமையாக அமல்படுத்தவும், தேவையான அனைத்து பதிவுகள், அதிகாரிகள் மற்றும் துறை அறிக்கைகளை பரிசீலித்து, முறைமன்ற ஆணை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தெளிவான இறுதி உத்தரவை பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

4. மனுதாரர் **28.07.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு ஆஜராகி தனது வாக்கு மூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"எனது **27.03.2026** நாளிட்ட மனு ஆணையர், நரசிங்கபுரம் நகராட்சி, சேலம் மாவட்டம் அவர்களுக்கு முகவரியிடப்பட்டதாகும். மேற்படி மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்படவில்லை. எனது மேற்படி மனுமீது நரசிங்கபுரம் நகராட்சி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் எனது **27.03.2026** நாளிட்ட மனுமீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **31.10.2023** நாளிட்ட ஆணையை செயல்படுத்துமாறு **2** முதல் **4** வரையிலான பிரதிவாதிகளான நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் செயற் பொறியாளர், குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வாரியம், சேலம் மாவட்டம் ஆகியோருக்கு உத்திரவிட என்னால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P. No. 21650/2026 தொடரப்பட்டது. மேற்படி வழக்கின் **10.06.2026** நாளிட்ட தீர்ப்பில் நரசிங்கபுரம் நகராட்சிக்கு முகவரியிடப்பட்ட எனது **27.03.2026** நாளிட்ட மனுமீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **31.10.2023** நாளிட்ட ஆணையை செயல்படுத்திட இம்முறைமன்ற நடுவத்திற்கு ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

எங்களது இடத்தில் சாலை ஏதும் அமைக்காமல், சாலை அமைக்கப்பட்டதாக ஆவணங்களை மட்டும் நரசிங்கபுரம் நகராட்சியினர் தயார் செய்துள்ளனர்.

வட்டாட்சியர், ஆத்தூர் அவர்களின் கடிதம் ந.க.சி/2283/2021/(சி1), நாள் 22.09.2021 நாளிட்ட கடிதத்தில் புல எண்கள் 379/1ல் வண்டிபாதை விளக்கியாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறைமன்ற நடுவத்தின் ஆணை எண்.263/ந/2023 தொடர்பான விசாரணையின் போது எனது மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண். 379/1, 3A ல் உள்ள எங்களது இடம் வண்டிப்பாதை விளக்கியாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தவறான அறிக்கையை நரசிங்கபுரம் நகராட்சி ஆணையரால் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எண். 263/ந/2023 நாள் 31.10.2023 ஐ செயல்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முகவரியிடப்பட்டு தனக்கு நகலிடப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தின் கடிதம் எண். 099/ந/2024, நாள் 02.09.2024 தனக்கு கிடைத்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், FMB–ல் குறிப்பிட்டுள்ள Dotted lines உள்ள மேற்கண்ட புலம் பொதுப்பாதை அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான ஆவணங்களின் நகல்களை பார்வைக்காக இத்துடன் இணைத்துள்ளேன்.

எங்களது இடத்தில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களை அகற்றி, எங்களது நிலத்தை எங்களிடம் ஒப்படைக்க உதவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விசாரணையின் போது 26 பக்கங்கள் மற்றும் 17 பக்கங்கள் கொண்ட இரண்டு தொகுப்புகளை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் எனது 27.03.2026 நாளிட்ட மனுவை கருணையுடன் பரிசீலித்து தங்களது 31.10.2023 நாளிட்ட ஆணையை விரைந்து செயல்படுத்தி உதவிடுமாறு பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.".

5. எதிர்மனுதாரரான நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர் 28.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துகொள்ளாததால் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையரை 06.08.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 28.07.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் நகல் மனுதாரருக்கும் அனுப்பப்பட்டது.

6. மனுதாரர் 06.08.2026 அன்று நடைபெற்ற விசாாணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்ட 27.03.2026 நாளிட்ட எனது கடிதத்தில் கோரியவாறு எனது இடத்தில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சாலையை அகற்றி இடத்தை என்வசம் ஒப்படைக்க உதவிடுமாறு பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசாணை (நிலை) எண்.57, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 23.01.2020ஐ தவறான புரிதலுடன் நகராட்சி செயல்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 31.10.2023 நாளிட்ட ஆணை எண்.263/ந/2023ஐ விரைந்து செயல்படுத்திட ஆணையிடுமாறும், ஆணையை நடைமுறைப்படுத்தாத அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், எனது 27.03.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு JCB வாகனம் மூலம் நிலத்தை சமப்படுத்துதல்

போன்ற அச்சுறுத்தல்கள் இனி எனக்கு ஏற்படாதவாறு நகராட்சி ஆணையரை அறிவுறுத்துமாறும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்பமை உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரம்பின்படி, மீதமுள்ள செயலாக்கங்களை இயன்றவரை இரண்டு வாரங்களுக்குள் முடித்து தர காலவரை நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

7. எதிர்மனுதாரரான நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர் செல்வி A. பவித்ரா மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு. D. சுரேஷ் ஆகியோர் 06.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"1. மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.21650/2026ல் 10.06.2026 நாளிட்ட தீர்ப்பின் நகல் மனுதாரரால் அனுப்பப்பட்டு 14.07.2026 அன்று பெறப்பட்டுள்ளது.

2. மேற்படி தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரரின் 27.03.2026 நாளிட்ட புகார் கடிதத்தின் அடிப்படையில் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டதில் மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட இடத்தில் தற்போது நகராட்சி மூலம் தார்சாலை அமைப்பதற்கான பணிகள் ஏதும் நடைபெறவில்லை.

3. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் ஆணை எண்.263/ந/2023, நாள் 31.10.2023 செயல்படுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக்கொண்டதற்கிணங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு இந்நகராட்சி கடிதம் ந.க.எண். 1227/2023/சி1, நாள் 29.04.2024ன் வழி பின்வரும் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

   I. மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள சாலையில் தலைவாசல் கூட்டுரோடு அரசு ஆட்டுப்பண்ணையில் அமைந்துள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் கொண்டு செல்லும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் பைப்லைன் போடப்பட்டுள்ளது.

   II. வட்டாட்சியர், ஆத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2283/2021/(சி1), நாள் 22.09.2021ன் படி புல எண். 379/1ல் புலப்படத்தில் தென்புறம் கிழமேலாக வண்டிப்பாதை விளக்கியாக பதிவு செய்யப்பட்டும், தற்போது நிலவியல் தார்சாலையாகவும், மேற்படி வண்டிப்பாதை உட்பிரிவு செய்யப்படாமல் வண்டிப்பாதை விளக்கியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

   III. மேலும், வருவாய் வட்டாட்சியர், ஆத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7745/2023/அ3, நாள் 08.01.2024ல் கஞ்சனூத்து பகுதியிலிருந்து புல எண்கள் 380/1, 380/2, 379/1, 304/4, 304/3B, 387/3, 387/2B2B, 387/2B1, 387/4A மற்றும் 287/6A ஆகியவற்றின் வழியாக ஆத்தூர் செல்லும் தார்சாலை அமைந்துள்ளதாகவும், இதில் புல எண்கள் 380/1, 380/2, 379/1, 304/4 (பாதிவரையிலும்), 304/3B, 387/3, 387/2B2B, 387/2B1, 387/4A மற்றும் 287/6A ஆகிய நிலங்களின் வழியே வண்டிப்பாதை செல்வதற்கான விளக்கியாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

IV. அரசாணை (நிலை) எண். 57, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் **23.01.2020**ன் படி பட்டா நிலத்தில் வண்டிப்பாதை விளக்கியாக காட்டப்பட்டிருந்தாலும், அவை அரசு நிலமாகக் கருதி அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட வேண்டும் என்றும், வண்டிப்பாதையாக உள்ளதை மக்கள் பயன்படுத்துவதை தடை செய்யக்கூடாது எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு வழக்கு எண். W.P. (MD) 19838 of 2023 மற்றும் WMP (MD) No. 16358 of 2024ன் **07.03.2024** நாளிட்ட தீர்ப்பாணையில் RSO No.26 (15)ன்படி நிலவியல் பாதை என குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் நகராட்சி மூலம் சாலை அமைக்கலாம் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.21650/ 2026ல் **10.06.2026** நாளிட்ட தீர்ப்பின் மீது அரசு வழக்கறிஞரின் சட்ட கருத்துரு பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்கிறோம் என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.".

**8.** நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்ட **27.03.2026** நாளிட்ட கடிதத்தில் கோரியவாறு மனுதாரரின் இடத்தில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சாலையை அகற்றி இடத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டும் என்பதும், FMB—ல் குறிப்பிட்டுள்ள Dotted lines உள்ள மேற்கண்ட புலம் பொதுப்பாதை அல்ல என்பதும், அரசாணை (நிலை) எண்.57, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் **23.01.2020**ஐ தவறான புரிதலுடன் நகராட்சி செயல்படுகிறது என்பதும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்கு W.P. No. 21650/2026ன்மீது வழங்கப்பட்ட **10.06.2026** நாளிட்ட தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறைமன்ற நடுவத்தின் ஆணை எண். **263/ந/2023**, நாள் **31.10.2023**-ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த காலவரை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதும், ஆணையை நடைமுறைப்படுத்தாத அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதும், **27.03.2026** நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு JCB வாகனம் மூலம் நிலத்தை சமப்படுத்துதல் போன்ற அச்சுறுத்தல்கள் ஏற்படாதவாறு இருக்க நகராட்சி ஆணையரை அறிவுறுத்த வேண்டும் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

**9.** மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.21650/2026ல் **10.06.2026** நாளிட்ட தீர்ப்பின் நகல் மனுதாரரால் அனுப்பப்பட்டு **14.07.2026** அன்று பெறப்பட்டுள்ளது என்பதும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் மீது அரசு வழக்கறிஞரின் சட்ட கருத்துரு பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மனுதாரரின் **27.03.2026** நாளிட்ட புகார் கடிதத்தின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதில் மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட இடத்தில் தற்போது நகராட்சி மூலம் தார்சாலை அமைப்பதற்கான பணிகள் ஏதும் நடைபெறவில்லை என்பதும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் ஆணை எண்.**263**/ந/**2023**, நாள் **31.10.2023** செயல்படுத்துவது தொடர்பான விவரங்கள் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். **1227/2023**/சி**1**, நாள் **29.04.2024**ன் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

11. இந்நேர்வில் –

1) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண்.21650/2026 (W.P.No.21650/2026)-ன் 10.06.2026 நாளிட்ட தீர்ப்பில் மனுதாரரின் 27.03.2026 நாளிட்ட மனுவினை பரிசீலித்து அதன்மீது உத்தரவு பிறப்பிக்கவும், இம்முறைமன்றத்தின் 31.10.2023 நாளிட்ட ஆணையினை செயல்படுத்திடவும் உத்தரவிட்டிருப்பதை இம்முறைமன்றம் கருத்தில் கொண்டது.

2) மனுதாரரின் 27.03.2026 நாளிட்ட மனு குறித்து 28.07.2026 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் தனது 27.03.2026 நாளிட்ட மனுவை கருணையுடன் பரிசீலித்து இம்முறைமன்ற நடுவத்தின் 31.10.2023 நாளிட்ட ஆணையை விரைந்து செயல்படுத்த உதவிடுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொண்டார்.

3) மேற்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் ஆணை எண்.263/ந/2023, நாள் 31.10.2023 உத்தரவினை நரசிங்கபுரம் நகராட்சி நடைமுறைபடுத்தினால், நகராட்சி தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல், மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board) மற்றும் வருவாய் துறையுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சனைகளுக்கும் தீர்வு காண இயலும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

4) 2015ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடு தாக்கல், விசாரித்தல் மற்றும் தீர்வு செய்தல் முறைகள்) விதிகளில், விதி 12–ல் முறைமன்ற நடுவத்தின் ஆணையினை செயல்படுத்துவது குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருப்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது:

> *"12. Implementation of the Order of the Ombudsman.- All the parties to the complaint and other persons to whom a direction was issued by Ombudsman in his/her order, as the case may be, are liable to implement the order of the Ombudsman. In case of non-implementation, severe action shall be taken by the competent authorities against those who fail to implement the orders of the Ombudsman, on a reference made by the Ombudsman."*

5) மேற்படி விதிகளின்படி இம்முறைமன்ற ஆணை எண். 263/ந/2023 வெளியிடப்பட்டு சுமார் மூன்றாண்டுகள் நிறைவடைய உள்ள நிலையிலும் மேற்படி ஆணை இதுவரை செயல்படுத்தப்படவில்லை. எனவே, இம்முறைமன்ற ஆணை எண். 263/ந/2023, நாள் 31.10.2023–னை உடன் செயல்படுத்திட சேலம் மாவட்டம், நரசிங்கபுரம் நகராட்சி ஆணையருக்கு தக்க உத்தரவினை பிறப்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும், மேற்படி ஆணையினை செயல்படுத்த தவறும் பட்சத்தில் தொடர்புடைய அலுவலர்கள் மீது 2015ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடு தாக்கல், விசாரித்தல் மற்றும் தீர்வு செய்தல் முறைகள்) விதிகளின், விதி 12–ன்படி துறைவாரியான நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவம், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

2026ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 24–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

2. நகராட்சி ஆணையர்,
நரசிங்கபுரம் நகராட்சி,
நரசிங்கபுரம், சேலம் மாவட்டம்.

3. திரு. S. கௌரி பிரசாந்த் த/பெ. K. சண்முகம்,
பெரிய பண்ணை தோட்டம், தெற்கு காடு,
நரசிங்கபுரம், தாண்டவராயபுரம் அஞ்சல்,
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் – 636 108.

4. பதிவாளர், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், சென்னை
(நீதிப்பேராணை எண்.21650/2026 [W.P.No.21650/2026]-ல் 10.06.2026 நாளிட்ட தீர்ப்பு)

5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.